அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்: அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது:-

(அ) ஆபத்துமிகு தொற்றாத நோய்களினால் பாதிக்கப்பட்டு இலங்கையின் பல்வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து கராபிட்டிய தேசிய வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வருகைதருகின்ற நோயாளர்களுக்கு தற்காலிக தங்குமிட வசதிகளை வழங்குதல் ;

(ஆ) அங்கவீனமுற்ற மற்றும் சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்காக பகல் நேர பாதுகாப்பு நிலையமொன்றைப் பேணிவருதல்;

(இ) வதிவிடத்தில் தங்கியிருப்போரின் ஓய்வுநேரத்தைக் கழிப்பதற்காக நூலக வசதிகளை வழங்குவதற்கு நூலகமொன்றைப் பேணிவருதல்;

(ஈ) நோயாளர்களுக்கு பாதுகாப்பாகவும் உரிய தரத்திலும் தயாரிக்கப்பட்ட போஷாக்குமிகு ஒருவேளை உணவை வழங்குதல்;

(உ) நோயாளர்களுக்கு தினசரி வழங்கவேண்டிய மருந்துவகைகளை உரியமுறையில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்குத் தேவையான குளிர்சாதனப் பெட்டி வசதிகளை ஒவ்வொரு நோயாளருக்கும் தனித்தனியாக வழங்குதல் மற்றும் சரியான நேரத்திற்கு உரிய மருந்து அளவினை நோயாளர்களுக்கு வழங்குவதற்காக உதவி சேவையினைப் பேணிவருதல்;

